**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | கணக்கீடு | நேரம் : 3 மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-** சுட்டெண் :....................................

- *01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 15 | |
| 16 – 15 | |
| மொத்தம் | |

## பகுதி I

01. நிதிக்கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றை தெரிவுசெய்க.
   1) அக்கறையுடைய தரப்பினர் தீர்மானமெடுத்தலுக்கு தேவையான பயனுள்ள தகவல்களை வழங்குகின்றது.
   2) இது கணக்கீட்டு நியமங்களுக்கும், சட்டங்களுக்கும் அமைவானது.
   3) இது வரலாற்றுதகவல்களையும், எதிர்வுகூறப்படும் தகவல்களையும் அடிப்படையாககொண்டது.
   4) இது நிதியாண்டுக்கு ஒருதடவை தயாரிக்கப்படும்.
   5) இது கணக்கீட்டின் பிரதான வகைகளில் ஒன்றாகும். (……....)

02. சீலன் நிறுவனத்தின் 31.1.2020 இல் சொத்து ரூ 500000 பொறுப்பு ரூ 200000 ஜனவரி மாத தகவல்கள் வருமாறு
   12.1 ரூ 20000 பண்டங்கள் ரூ 40000 பட்டியல் விலையில் 20% வியாபாரக்கழிவில் கடனுக்கு விற்கப்பட்டது.
   20.1 ரூ 8000 விற்கப்பட்ட பண்டங்கள் கடன்பட்டோனால் திருப்பப்பட்டது. (இவை 12.1 இல் விற்கப்பட்டது)
   25.4 இம்மாத தேறிய கடன் விற்பனை தொடர்பில் வரவேண்டிய தொகையில் 2/3ம் 10% கழிவு தள்ளி காசு பெறப்பட்டது.

   மேற்படி கொடுக்கல்வாங்கல் இடம்பெற முன்னர் 1.1.2020 இல் உள்ள சரியாய மீதிகள் யாது?

| | சொத்து | பொறுப்பு | தேறிய சொத்து |
|---|---|---|---|
| 1) | 507400 | 200000 | 507400 |
| 2) | 487600 | 200000 | 287600 |
| 3) | 397000 | 142000 | 255000 |
| 4) | 497600 | 200000 | 297600 |
| 5) | 492600 | 200000 | 292600 |

(……....)

03. சொத்து அதிகரிக்கும் தொகையின் ½ பகுதியால் பொறுப்பு அதிகரிக்க மிகுதியால் உரிமை அதிகரித்தது. இதனை பிரதிபலிக்கும் சரியான கொடுக்கல்வாங்கல்.

1) உட்திரும்பல் ரூ 6000 இதன்கிரயம் ரூ 3000
2) விற்பனை ரூ 6000 இதன் கிரயம் ரூ 3000
3) செலுத்திய மின்சாரம் ரூ 6000 இதில் ரூ 3000 இம்மாதத்திற்கும் மிகுதி அடுத்துவரும் மாதத்திற்கும்
4) பெற்றவாடகை ரூ 6000 இல் ரூ 3000 இம் மாதத்திற்கு மிகுதி அடுத்த மாத்திற்கு
5) ரூ 6000 மூலதனமிட்டு இதில் ரூ 3000 பற்றினார். (……....)

❖ சேரன், சோழனிடமிருந்து (10% Vat உட்பட) ரூ 44000 விலையில் பண்டங்களை கொள்வனவு செய்து. இதில் (10% Vat உட்பட) ரூ 2200 பண்டங்களை சோழனுக்கு திருப்பியனுப்பி எஞ்சிய பண்டங்களில் ½ பகுதியை சேரன் (10% Vat உட்பட) ரூ 33000 இற்கு பாண்டியனுக்கு விற்பனை செய்ததுடன், பாண்டியனிடம் வரவேண்டிய தொகையில் ரூ 31000 பகுதி காசு பெறப்பட்டதுடன் மிகுதி அறவிடமுடியாக்கடனாக பதிவளிக்கப்பட்டது.
மேற்படி தரவுகளில் இருந்து 4ம், 5ம், 6ம் வினாக்களுக்கு விடை தருக.

04. சேரனது ஏட்டில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு முறையில் பதிவதற்கான மூல ஆவணங்களின் வரிசை எது?

1) கொள்வனவுப்பட்டியல், செலவுத்தாள், விற்பனைப்பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு.
2) கொள்வனவுப்பட்டியல், வரவுத்தாள், விற்பனைப்பட்டியல், கைச்சாத்து, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
3) கொள்வனவுப்பட்டியல், வரவுத்தாள், விற்பனைப்பட்டியல், பற்றுச்சீட்டு, உறுதிச்சீட்டு.
4) விற்பனைப்பட்டியல், வரவுத்தாள், கொள்வனவுப்பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு.
5) கொள்வனவுப்பட்டியல், வரவுத்தாள், விற்பனைப்பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு.

(……....)

05. மேற்படி கொடுக்கல் வாங்கல்களால் தேறியசொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

1) ரூ 11000 2) ரூ 9000 3) ரூ 10100 4) ரூ 5000 5) ரூ 12100

06. மேற்படிகொடுக்கல் வாங்கல்களினால் பெறுமதிசேர் வரி (ஏயுவு) கணக்கின் இறுதி மீதி யாது?

1) ரூ 800 செலவு 2) ரூ 800 வரவு 3) ரூ 1000 செலவு
4) ரூ 1000 வரவு 5) ரூ 900 வரவு (……....)

07. குகன் நிறுவனத்தினால் 2020 மார்ச் மாதத்தில் வைப்புச்செய்யப்பட்ட மொத்த வைப்பு ரூ 162000, இம் மாதத்தில் எழுதிக்கொடுக்கப்பட்ட காசோலைகளின் மொத்தம் ரூ 124000 சென்றமாத மாற்றப்படாத, வசூழிக்கப்படாத காசோலைகள் இம் மாதம் மாற்றப்பட்டு,வசூழிக்கப்பட்டது.

| | மார்ச் ரூ | பெப்ரவரி ரூ |
|---|---|---|
| மாற்றப்படாத காசோலை | 7400 | 3200 |
| வசூழிக்கப்படாத காசோலை | 6300 | 2800 |

2020 மார்ச் மாதத்தில் மாற்றப்பட்ட, வசூழிக்கப்பட்ட காசோலையின் பெறுமதிகள் முறையே யாது?

1) ரூ 119800, ரூ 158500 2) ரூ 158500, ரூ 119800 3) ரூ 128200, ரூ 165500
4) ரூ 165500, ரூ 128200 5) ரூ 116600 ,ரூ 157700 (……....)

❖ வரையறுத்த சாய்ராம் கம்பனியின் கடன்படுநர் பட்டியல் ரூ 58000 கட்டுப்பாட்டுக் கணக்கு உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.

- கொடுத்த கழிவு ரூ 3500 காசுப்பெறுவனவு நாளேட்டில் ரூ 3000 எனபதியப்பட்டது.
- கடன்பட்டோன் மீது விதித்தவட்டி ரூ 4400 கடனபட்டோர் பேரேட்டில் ரூ 400 எனவும் விதித்த வட்டிக் கணக்கில் ரூ 4000 எனவும் பதியப்பட்டது.
- எதிர்மாற்றல் ரூ 3000 பொதுப்பேரேட்டில் உள்ள இரு கணக்குகளிலும் வரவுப் பக்கங்களில் பதியப்பட்டது.
- அறவிடமுடியாக்கடன் ரூ 2400 கடன்பட்டோர் பேரேட்டில் ரூ 400 எனவும் அறவிடமுடியாக்கடன் கணக்கில் ரூ 2000 எனவும் பதியப்பட்டது.

மேற்படி தரவுகளில் இருந்து 8ம் 9ம், 10ம், வினாக்களுக்கு விடை தருக.

08. திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் திருத்த முன்கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் முறையே யாது?
1) ரூ 66500, ரூ 59500 2) ரூ 61000, ரூ 55500 3) ரூ 59500, ரூ 58500
4) ரூ 59500, ரூ 66000 5) ரூ 59500, ரூ 65500 (……....)

09. மேற்படி பிழைதவறுகளால் தொங்கல் கணக்கு மிதி யாது?
1) செலவு ரூ 6000 2) வரவு ரூ 6000 3) வரவு ரூ 6400
4) செலவு 5600 5) வரவு 5600 (……....)

10. மேற்படி பிழை தவறுகளால் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது?
1) ரூ 500 ஆல் அதிகரிக்கும், 2) ரூ 500 ஆல் குறையும் 3) ரூ 1400 ஆல் அதிகரிக்கும்
4) ரூ 100 ஆல் அதிகரிக்கும் 5) 1300 ஆல் அதிகரிக்கும் (……....)

11. நிறுவனம் தனது உறுப்பினரது தலையீடு இன்றி சுதந்திரமானமுறையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு வகை செய்யும் கணக்கீட்டு எண்ணக்கரு எது?
1) பாதுகாப்பு எண்ணக்கரு 2) தேறிய எண்ணக்கரு 3) பொருண்மை எண்ணக்கரு
4) மாறா நிலை எண்ணக்கரு 5) அலகுசார் எண்ணக்கரு (……....)

12. சுரங்கத்தொழில் முயற்சியில் ஈடுபடும் ஒருவர் அம் முயற்சி நிறைவடையும் வரை அதன் பெறுபேற்றை மதிப்பிடவில்லை. இது எவ் எண்ணக்கருவை மீறுவதாகும்
1) பாதுகாப்பு எண்ணக்கரு 2) அலகுசார் எண்ணக்கரு 3) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
4) தொடந்து செல் எண்ணக்கரு 5) கால எண்ணக்கரு (……....)

13. தமிழன் நிறுவனத்தின் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | 31.3.2019 | 31.3.2018 |
|---|---|---|
| கடன்பட்டோர் | 58000 | 62000 |
| அறவிமுடியா ஐயக்கடன் ஒதுக்கம் | 5800 | 6200 |

31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டில் ரூ 6000 அறவிடமுடியாக்கடனாக பதிவளிக்கப்பட்டதுடன், வருட இறுதிக்கடன்பட்டோரில் ஒரே வீத ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. கடன்பட்டோனால் திருப்பப்பட்ட ரூ 6000 பெறுமதியான பண்டங்கள் தவறுதலாக கடன்பட்டோன் கணக்கில் ரூ 9000 என பதியப்பட்டது. 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றில் காட்டப்படவேண்டிய அறவிடமுடியா,ஐயக்கடன் தொகை யாது?

1) ரூ 5600, 2) ரூ 5300 3) ரூ 6400 4) ரூ 6700 5) ரூ 5900 (……....)

14. கபிலன் நிறுவனம் தனது களஞ்சியத் தேவைக்காக 1.1.2018 இல் வருடாந்தம் ரூ 180000 வாடகைக்கு கட்டிடமொன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டது. கட்டிசொந்தக்காரருடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாக 1.1.2019 இல் இருந்து ரூ 240000 வாடகைக்கு பதிய கட்டிடமொன்றை பெற்றுக்கொண்டது. நிறுவன நிதியாண்டு ஒவ்வொரு 31.3 இலும் முடிவடைகின்றது. 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டு காலத்தில் காசாக ரூ 230000 வாடகை செலுத்தப்பட்டது. ஆரம்ப அட்டுறு முற்பணம் எதுவும் காணப்படவில்லை.

மேற்படி தகவல்களில் இருந்து 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றில் காட்டவேண்டிய வாடகையும், 31.3.2019 இல் நிதிநிலைமைக்கூற்றில் வாடகைதொடர்பாககாட்டவேண்டிய தொகையையும் தருக.

| | **வருமானக்கூற்று** | **நிதிநிலைமைக்கூற்று** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 1) | 195000 | 35000 அட்டுறுச் செலவு |
| 2) | 200000 | 30000 முற்பனச் செலவு |
| 3) | 195000 | 35000 முற்பனச் செலவு |
| 4) | 240000 | 10000 அட்டுறுச் செலவு |
| 5) | 225000 | 5000 முற்பனச் செலவு |

(……....)

15. சிரோன் நிறுவனத்தின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த விற்பனை ரூ 420000, மொத்தலாபம் ரூ 180000 இவ்வாண்டில் இருப்பு எடுத்தல் தொடர்பில் பின்வரும் தவறுகள் இடம்பெற்றன.

| | அதிகரிப்பு | குறைவு |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 12000 | - |
| இறுதி இருப்பு | - | 8000 |

மேற்படி பிழை தவறுகள் சீராக்கப்பட்ட பின்னர் மொத்தலாபம், விற்பனைக்கிரயம் என்பன முறையே யாது?

| | **மொத்தலாபம்** | **விற்பனைக்கிரயம்** |
|---|---|---|
| 1) | 160000 | 220000 |
| 2) | 176000 | 244000 |
| 3) | 184000 | 236000 |
| 4) | 200000 | 220000 |
| 5) | 176000 | 424000 |

(……....)

❖ ***16 – 25 வரையான வினாக்களுக்கு விடை தருக***

2020 ஜனவரி மாத ஊழியருக்கு செலுத்தப்பட்ட தேறிய சம்பளம் ரூ 36000 ஊழியர் சேமலாபநிதிக்கு (EPF) ஊழியர் 10% மும் தொழில்கொள்வோன் 15% பங்களிப்பு செய்கின்றனர் ஊழியார் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில்கொள்வோன் 5% பங்களிப்பு செய்கின்றனர். ஒவ்வொருமாத பங்களிப்பும் அடுத்தமாதம் செலுத்தப்படுகின்றது.

***16, 17 ம் வினாக்களுக்கு விடை தருக.***

16. ஜனவரி மாத இறுதியில் சொத்து பொறுப்பு உரிமையில் ஏற்படும் தேறிய தாக்கம் யாது?

| **சொத்து** | **உரிமை** | **பொறுப்பு** |
|---|---|---|
| …………. | ..……… | …………….. |

17. ஊழியர் சார்பான ஜனவரி மாத மொத்தச் செலவு யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

18. சொத்து ரூ 75000 ஆல் அதிகரிக்க பொறுப்பு ரூபா 35000 ஆல் குறைவடைய ஆண்டுகாலத்தல் உரிமையாளரால் 20000 மேலதிக மூலதனத்தை ஈடுபடுத்தியதுடன் ரூ 8000 தொகையை பற்றினார் எனின் நிதியாண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் யாது?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

19. பின்வரும் கணக்குகளில் ஏற்படும் தாக்கத்தையும் பதிவையும் வெற்றிடத்தில் குறிப்பிடுக.

| **கணக்குகள்** | **தாக்கம்** | **பதிவு** |
|---|---|---|
| 1) மூலதனக்கணக்கு | அதிகரிப்பு | ……… |
| 2) பற்றுக்கணக்கு | ………. | செலவு |
| 3) விற்பனைக் கணக்கு | குறைவு | ……… |
| 4) முதலீடுகள் | ……. | செலவு |

20. சுயந்தன் என்ற சில்லறை வியாபாரி 2020 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கு முறையே ரூ 3500, ரூ 4000, ரூ 5000 தொகையை கட்டுநிதியாக பேனுகினறது. ஓவ்வொரு மாததொடக்கத்திலும் கட்டுநிதி மீள்நிரப்பப்படுகின்றது. மார்ச் 1 இல் ரூ 2100ம், .பெப்ரவரியில் 1 இல் ரூ 1800 மீள்நிரப்பப்பட்டது. எனின் ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கான சில்லறைச் செலவுகள் முறையே யாது?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

➢ சரன் நிறுவனத்தின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ 34000, மொத்தலாபம் ரூபா 82000 முடிவடைந்த நிதியாண்டில் இடம்பெற்ற பின்வரும் பிழைதவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- பேரேட்டில் காணப்பட்ட உட்சுமைகூலி ரூ 3000 பரீட்சை மீதிக்கு எடுத்துவரவில்லை.
- விற்பனைத் திரும்பல் ரூ 1000 விற்பனை நாளேட்டில் ரூ 10000 என பதிவிடப்பட்டது.
- பொறிபழுதுபார்த்தல் ரூ 5000 பொறிக்கணக்கில் ரூ 50000 என பதியப்பட்டது. பொறிக்கு 8% தேய்விடப்பட்டது.

❖ **21ம், 22ம் வினாக்களுக்கு விடைதருக**

21. அ) திருத்தப்பட்ட மொத்தலாபம் யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

ஆ) திருத்தப்பட்ட தேறியலாபம் யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

22. மேற்படி பிழைதவறுகளால் பரீட்சை மீதியன் எப்பக்கம் எவ்வளவு தொகையால் அதிகமாக காணப்படும்.

…………………………………………………………………………………………………………

23. வயைறுத்த காவியா பொதுக்கம்பனி ..................... A

31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று

ரூ 000 ......................................... B

| | | |
|---|---|---|
| கடன்விற்பனை | xxx | ………………………… C |
| விற்பனைக் கிரயம் | xxx | |
| பெறுமானத்தேய்வு | xxx | ................................... D |

**கணக்கீட்டு எண்ணக்கரு**

A - …………………………………………….………..

B - ……………………………………………..……….

C - ……………………………………………..……….

D - …………………………………….………………

24. பினவரும் கூற்றுக்கள் சரியா/பிழையா எனகூறுக.

அ) காசுக்கட்டுப்பாட்டு மீதியும் வங்கிக்கூற்று மீதியும் குறித்த மாதத்தில் சமனாக காணப்படின் வங்கிக்கணக்கிணக்க கூற்று தயாரிக்க வேண்டியதில்லை. (……....)

ஆ) விற்பனைத் திரும்பல் ரூ 3000 திரும்பல் நாளேட்டில் 300 என பதியப்படின் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியைவிட பட்டியல் மீதி 2700 ஆல் அதிகமாகும். (……....)

இ) துனைப்பேரேடு ஒற்றைப்பதிவு முறையிலும், பொதுப்பேரேடு இரட்டைப் பதிவு முறையிலும் தயாரிக்கப்படும். (……....)

ஈ) சில்லறை காசாளரால் செலவிடப்பட்ட தொகை மாத்திரமே பிரதம காசாளரால் மீள்நிரப்புச் செய்யப்படும். (……....)

25. 31.3.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| கடன் கொள்வனவு | ரூ 800 000 |
| கடன்கொநரிமிருந்து கிடைத்த கழிவு | ரூ 40 000 |
| எதிர் மாற்றல் | ரூ 10 000 |
| கொவனவுத் திரும்பல் | ரூ 25 000 |
| கடன்கொடுநர் மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு | ரூ 60 000 |

31.3.2019 இல் முடிவடைந்த ஆண்டில் கடன்கொடுநருக்கு செலுத்திய தொகை யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(25x4100 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக.**

தனிவியாபாரியான ராம் நிறுவனத்தின் ஏடுகளில் 31 மார்ச் 2019 முடிவடைந்த தினத்தில் இல் உள்ள பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு ரூபா 000 | செலவு ரூபா 000 |
|---|---|---|
| விற்பனைக்கிரயம் | 12500 | |
| வங்கிக்கடன்வட்டி | 400 | |
| காசுக்கட்டுப்பாடு | 12970 | |
| விற்பனை | | 22000 |
| விளம்பரம் | 300 | |
| பெற்றதரகு | | 800 |
| சம்பளம் (தேறியது) | 540 | |
| மின்சாரம் | 280 | |
| மூலதனம் | | 15000 |
| பற்று | 200 | |
| கழிவுகள் | 210 | 350 |
| காப்புறுதி | 340 | |
| நடைமுறையல்லாச் சொத்துக்களும், தேய்மானதேய்மான ஒதுக்கமும் | 11000 | 1000 |
| 12% வங்கிக்கடன் | | 2000 |
| 31/3/2019 இல் இருப்பு | 400 | |
| சென்மதி ஊழியர் சேமலாப நிதியம் | | 120 |
| வருமதியாளர் சென்மதியாளர் | 1200 | 800 |
| வருமதிகளின் மதிப்புக் குறைவு நட்டம், | 100 | |
| எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி | | 120 |
| 20% முதலீடு (30/9/2018) | 2000 | |
| முதலீட்டுவருமானம் | | 250 |
| | **42440** | **42440** |

**மேலதிக தகவல்**

- 31/3/2019 இல் உள்ளபடியான இருப்பின்கிரயத்தில் ரூபா 3000 000 பழுதடைந்த பொருள் உள்ளடக்கப்பட்டுள்ளது இதன் தற்போதைய பெறுமதி 2800 000 ஆகும்.
- மின்சாரத்தில் ரூபா 200000 வும், காப்புறுதியில் ரூபா 100 000 ம் சென்மதியாகவுள்ளது.
- விளம்பரத்தில் ரூபா 80000 முற்பனமாகவுள்ளது.
- கட்டிடங்களுக்கு கிரயத்தில் 5% மும், பொறிக்கு கிரயத்தில் 10% மோட்டார் கிரயப் பெறுமதியில் 10% தேய்விடுக.
- நடைமுறையல்லாச் சொத்துக்களும் தேய்மான ஏற்பாடும் வருமாறு.

| சொத்துவிபரம் | கிரயம் 000 | 1/4/2018 இல் தேய்மான ஏற்பாடு 000 |
|---|---|---|
| காணி | 800 | - |
| கட்டிடம் | 5200 | 320 |
| பொறி | 1000 | 280 |
| மோட்டார் | 4000 | 400 |
| | 11000 | 1000 |

- மதிப்புக்குறைவு நட்டமாக மேலும் ரூபா 200000 ஐ பதிவளிக்குக. எதிர்பர்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கத்திற்கு எஞ்சிய கடன்பட்டோரில் ரூபா 2% ஆல் அதிகரிக்குக.
- உடமையாளர் காலாண்டுக்கு ஒருமுறை ரூபா 100000 கிரயமான பண்டங்களை சொந்ததேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம் பெறவில்லை
- ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 400000 பண்டங்கள் தீயினால் அழிக்கப்பட்டது. இவற்றில் 75% மானது காப்புறுதி கம்பனி நட்டஈடாக தரமுன்வந்தது இது தொடர்பில் ஏடுகளில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
- 31/12/2018 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் ரூபா 200000 கொள்வனவு கணக்கிற்கு வரவிடப்பட்டது.
- ஊழியர் சேமலாபநிதியத்திற்கு ஊழியர் 10% மும், தொழில்கொள்வோன் 15% ம் பங்களிப்பு செய்கின்றனர் இதற்கான இவ்வாண்டுகான ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**தயாரிக்குக**

1) 31/3/2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்று
2) 31/3/2019 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

(30 புள்ளிகள்)

**வினா இல 02**

அ) திலீபன் ரேடேர்ஸ் நிறுவனத்தின் 2020 ஜனவரி இல் முடிவடைந்த மாதத்திற்கான கொடுக்கல் வாங்கலகள் கீழ்வரும் சமன்பாட்டில் தரப்பட்டுள்ளளது.

| கொடு.வா | பொறி | இருப்பு | வி. வருமதி | காசு | மூலதனம் | கடன் | வியாபார சென்மதி | நிறுத்தி வைத்த லாபம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீதி 1.1 | 400000 | 50000 | 60000 | 120000 | 400000 | 100000 | 50000 | 80000 |
| 3.1 | | -18000 | +40000 | | | | | +22000 |
| 5.1 | | | -20000 | +18000 | | | | -2000 |
| 8.5 | | +4000 | -6000 | | | | | -2000 |
| 12.1 | | | -4000 | | | | -4000 | |
| 15.1 | +200000 | | - | | | +200000 | | -2000 |
| 18.1 | | -3000 | | -2000 | -5000 | | | |
| 21.1 | | | | | +6000 | | -8000 | +2000 |
| 24.1 | | | | -5000 | | -4000 | | -1000 |
| 28.1 | | -3000 | | | | | | -4000<br>+1000 |
| 31.1 | | | | -10000 | -8000 | | | -2000 |

**மேலதிக தகவல்**

1) பொறிக்கு 12 % தேய்விடப்படவேண்டும்.
2) கடன்பட்டோர் நேரடிவைப்பு ரூ 10000
3) ஜனவரி மாத நிலையியற்கட்டளை வாடகை ரூ 500
4) 31.1 இல் உள்ள இறுதிக்கடன்பட்டோரில் 5% ஐயக்கடன் ஒதுக்கத்தை மேற்கொள்க.

**வேண்டப்படுவது :-**

1) முதல் 10 கொடுக்கல் வாங்கல்களையும் விபரிக்குக.
2 சமன்பாட்டை அடிப்படையாக கொண்டு தேறியலாபத்தை கணிக்குக.
3 31.1.2020 இல் பின்வரும் மீதிகள்
தேறிய வியாபார வருமதி, காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி, உரிமையாண்மை, பொறியின் முன்கொண்டுவரும் தொகை. (18 புள்ளிகள்)

ஆ) ஐங்கரன் நிறுவனத்தின் 2020 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமறு

1.1 காசு விற்னை (10% VAT) உட்பட ரூ 27500
3.1 காசுக்கொள்வனவு (10% VAT) உட்பட ரூ 13200
5.1 கடன் விற்பனை (10% VAT) உட்பட ரூ 22000
10.1 கடன் கொள்வனவு (10% VAT) உட்பட ரூ 19800
18.1 சம்பளம் ரூ 4500
22.1 மூலதனமிட்டது ரூ 100000
23.1 பெற்றவாடகை ரூ 8000
25.1 கடன்பட்டோரிடமிருந்து 10% கழிவுதள்ளி ரூ 16200 பெறப்பட்டது.
27.1 கடன்கொடுநருக்கு 15 % கழிவு தள்ளி ரூ 10200 செலுத்தப்பட்டது.
30.1 பற்று ரூ 4000

**வேண்டப்படுவது**

1) காசுப்பெறுவனவு நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு
2) பொதுப்பேரேட்டில் வேண்டிய பேரேட்டுக் கணக்குகள்
3) 31.1.2020 பரீட்சைமீதி

(12 புள்ளிகள்)
(மொத்தம் 30 புள்ளிகள்)

**வினா இல 03**

நிர்மலா வணிக நிறுவனத்தின் 2020 ஜனவரி மாதத்திற்கான வங்கிக்கூற்று வருமாறு.

| திகதி | விபரங்கள் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 1.1.2020 | மீதி | | | 24000 |
| 2.1.2020 | காசோலை 49521 | 3000 | | 21000 |
| 5.1.2020 | காசோலை 49520 | 4000 | | 17000 |
| 6.1.2020 | காசுவைப்பு | | 5000 | 22000 |
| 10.1.2020 | காசோலை வைப்பு | | 3000 | 25000 |
| 15.1.2020 | நேரடிவைப்பு | | 6000 | 31000 |
| 25.1.2020 | காசோலை 49519 (சென்றமாதம் எழுதப்பட்டது) | 2000 | | 29000 |
| 26.1.2020 | நிலையியற்கட்டளை கொடுப்பனவு | 2500 | | 26500 |
| 27.1.2020 | காசோலை புத்தகம் | 500 | | 26000 |

**பிற தகவல்கள்**

1) காசுக்கட்டுப்பாட்டில் பதியப்பட்ட பின்வரும் காசோலைகள் மேலேயுள்ள வங்கிக்கூற்றில் பதியப்படவில்லை.

| திகதி | கா.சோ. இல | தொகை | விபரம் |
|---|---|---|---|
| 28.1.2020 | 49522 | 3400 | வரையறுத்த ரமனி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது |
| 30.01.2020 | 720620 | 5600 | வங்கியில்வைப்புச் செய்யப்பட்டது. |

சென்றமாத மாற்றப்படாத காசோலைகள் (2019 டிசம்பர்) முறையை 49519 இல ரூ 2000 மும், 49518 இல ரூ 5100 காசோலைகளும் காணப்பட்டது. எனினும் சென்ற மாதம் வசூழிக்கப்படாத காசோலை எவையும் காணப்படவில்லை. வங்கிக்கூற்று கிடைக்கமுன்னர் காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கு தயாரிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

1) 2020 ஜனவரி மாத சுருக்கிய காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கு
2) காசுப் புத்தகத்தில் தேவையான சீராக்கங்களை செய்ய.
3) ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணங்ககூற்றை தயாரிக்கவும்.

(20 புள்ளிகள்)

**வினா இல 04**

வரையறுத்த சேயோன் பொதுக் கம்பனியின் 1.3.2019 இல் உள்ள கடன்பட்டோன் பேரேட்டு மீதிகளின் மொத்தம்.

| **கடன்பட்டோர்** | 1.3.2019 இல் மீதி 000 |
|---|---|
| மதன் | 600 |
| சுதன் | 400 |
| நாதன் | 500 |
| மொத்தம் | **1500** |

கம்பனியின் மூலப்பதிவேட்டிலிருந்து 2019 மார்ச் மாதத்திற்கான கடன்விற்பனைகளும் அவைதொடர்பான கொடுக்கல்வாங்கலின் விபரம் வருமாறு. எல்லாம் 000

| கடன்பட்டோர் | விற்பனை | விற்.திரும்பல் | பெற்ற காசு | அனுமதித்தகழிவு | அறவிடமுடியாகடன் |
|---|---|---|---|---|---|
| மதன் | 2500 | 100 | 1800 | 150 | - |
| சுதன் | 2000 | 200 | 1300 | 50 | 100 |
| நாதன் | 3000 | 300 | 1600 | 200 | 300 |
| தீபன் | 4000 | 400 | 2100 | 50 | 200 |
| **மொத்தம்** | **11500** | **1000** | **6800** | **450** | **600** |

1.3.2019 இல் கடன்பட்டோன் ரேரேட்டு மீதிகளின் மொத்தம் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியது எனினும் இவ் இரண்டுமீதிகளும் 31.3.2019 இல் இணங்கவில்லை. பரிசீலினையின்போது பின்வரும் பிழைகள் மேற்கொள்ளப்பட்டது. எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

1) மதன் திருப்பப்பட்ட சரக்குகள் மதன் கணக்கில் பதியப்படவில்லை.
2) சுதன் விற்பனைகள் விற்றபொருளின் பட்டியல் விலையில் சுதன் கணக்கில் பதியப்பட்டது சுதனுக்கு அனுமதிக்கப்பட்ட வியாபாரக்கழிவு 20% ஆகும்
3) நாதனிடம் பதிவளித்த அறவிடமுடியாக்கடன் அவர் கணக்கில் இரு தடைவை பதியப்பட்டது.
4) விற்பனைகளின் மொத்தம் கட்டுப்பாட்டுக்கணக்கில் ரூ 11000 000 என பதியப்பட்டது.
5) கடன்பட்டோரிடம் பெற்ற காசு கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ 8600 என பதியப்பட்டது
6) கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக்கணக்கின் செலவுப்பக்கம் ரூ 100 000 கூட்டிக்கூட்டப்பட்டது.

**வேண்டப்படுவது:**

1) மார்ச் மாத திருத்தமுன் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு
2) திருத்திய கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு
3) மேலுள்ள பிழைகள் திருத்தமுன் 31.3.2019 இல் உள்ள கடன்பட்டோன் பேரேட்டு மீதிகளின் மொத்தம்.

(20 புள்ளிகள்)

**வினா இல 05**

வரையறுத்த சாம்கோ கம்பனியின் பரீட்சை மிதி 31/3/2019 இல் சமப்படவில்லை வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு பின்னர் பின்வரும் பிழைதவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி நிறுவனத்தின் 31/3/2019 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறியநட்டம் 28800 ஆகவும் மொத்தலாபம் ரூ 85000 ஆகவும் காணப்பட்டது.

அ) விற்பனைத்திரும்பல் ரூபா 3000 விற்பனை நாளேட்டில் ரூபா 30000 என பதிவிடப்பட்டது.

ஆ) காசுப்பெறுவனவு நாளேட்டின் கழிவு நிரல் ரூபா 1000 வால் மிகையாக கூட்டப்பட்டது.

இ) பேரேட்டில் காணப்பட்ட பெற்றவட்டிக் கணக்கு ரூபா 3200 பரீட்சைமீதிக்கு ரூபா 2300 என எடுத்துவரப்பட்டது.

ஈ) 31.12.2018 இல் இடம்பெற்ற பொறிக் கடன்கொள்வவு ரூ 20000 கொள்வனவு நாளேட்டில் ரூ 2000 என பதியப்பட்டது பொறிக்கு 10% தேய்விடப்பட்டது.

உ) ஆரம்பஇருப்பு ரூபா 3000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டது.

ஊ) 10% பெறுமதிசேர் வரியை உள்ளடக்கிய கடன் விற்பனை ரூ 11000 கடன்பட்டோன் கணக்கிற்கும் விற்பனைக் கணக்கிற்கும் வரவிடப்பட்டது.

எ) 30.6.2019 இல் முடிவடைந்த 15 மாதங்களுக்கு செலுத்திய வாடகை ரூ 7500 முழுவதும் முற்பன வாடகைக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

ஏ) கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது**

1) பிழை தவறுகளை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்.
2) மொத்தலாபச் இலாபச் சீராக்ககூற்று
3) தொங்கல் கணக்கு
4) தேறியலாபச்சிராக்க கூற்று

(20 புள்ளிகள்)